செ.வெ.எண்:46 நாள்:30.01.2017

# அரியலூர் மாவட்டம், புதுவாழ்வுத் திட்டம் சார்பில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.01.2017) வழங்கினார்.

அரியலூர் மாவட்டம், புதுவாழ்வுத் திட்டத்தின் சார்பில் காரைக்குடியில் நடைபெற்ற தேசிய அளவிலான மாற்றுத்திறனாளிகள் மற்றும் குள்ளமானவர்களுக்கான தடக்களப்போட்டியில் (National Drawf Athletic and State Para Athletic meet competition) கலந்துகொண்ட 18 மாற்றுத்திறனாளிகளில், 10 மாற்றுத்திறனாளிகள் மொத்தமாக 12 தங்க பதக்கம், 8 வெள்ளி பதக்கம், 6 வெண்கலம் பதக்கம் என ஆக மொத்தம் 26 பதக்கங்களை வென்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், ரூ.33,000/- மதிப்பிலான ஊக்கத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், புதுவாழ்வுத் திட்ட மேலாளர் திரு.முத்துவேல், உதவி திட்ட மேலாளர் திரு.ஹரிதாஸ் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**